30th June 1962]

திரு. ஏ. கஜபதி நாயகர் : சார், இது எத்தனை பிரதிகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடப்படுகின்றன ?

கனம் திரு. ஜி. பூவராகன் : ஆங்கிலத்தில் மட்டும்தான் பிரிண்ட் செய்யப்படுகிறது. ஐயாயிரத்து முன்னூறு பிரதிகள் அச்சடிக்கப் படுகின்றன.

திரு. கே. ராமதாஸ் : இதைத் தமிழிலும் பிரசுரிக்க ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. ஜி. பூவராகன் : பரிசீலனை செய்து செய்யப்படும்.

திரு. ஏ. கஜபதி நாயகர் : நியூஸ் ரீலில் போட்டால் அதிக மான பிரதிகள் போட்டு மக்களுக்குக் குறைந்த விலையில் கொடுக் கலாம் அல்லவா ?

கனம் திரு. ஜி. பூவராகன் : நியூஸ் பிரிண்ட் பேப்பர் உபயோகப் படுத்துவதற்கு வசதியான தாள்கள் கிடைக்கவில்லை. வெளிநாட்டி லிருந்து இறக்குமதி செய்வதற்கு இப்போது அனுமதி அளிப்பது கிடையாது. . .

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஆங்கில வெளியீட் டுக்கு ஈடாக தமிழில் அரசாங்கத்தின் வெளியீடு ஏதேனும் வெளி யிடப்படவில்லையா ? "சென்னைச் செய்தி" இதனுடைய நேர் மொழிபெயர்ப்பாகக் கொள்ளலாமா ?

கனம் திரு. ஜி. பூவராகன் : "கிராம நலம்" என்ற பத்திரிகை வெளியிடப்படுகிறது. அது இதற்கு ஈடாக இருக்கும்.

MR. CHAIRMAN : **Questions are over.**

[*Note:*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ANNOUNCEMENTS *RE* DICISIONS OF THE BUSINESS ADVISORY COMMITTEE.

MR. CHAIRMAN : At a meeting of the Business Advisory Committee held at 2-30 p.m. today, the following programme of business has been decided :— 3-10 p.m.

2nd to 7th July 1962—General discussion on the Budget for the year 1962–63.

8th to 30th July 1962—No meeting.

31st July and 1st August 1962—Appropriation Bill and other Government Bills.

2nd August 1962—Non-official day.

The Council will meet daily at 3 p.m.